# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 406/2012**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. **சுரேஷ்** | மதம் | .. **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. **நடராஜன்** | தொழில் | .. **டீ கடை** |
| வயது | .. 39 | நாள் | .. 14.06.2024 |
| கிராமம் | .. **சங்ககிரி** | | |
| வட்டம் | .. **சங்ககிரி** | | |

2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14-ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.சுரேஷ் த/பெ. நடராஜன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.K.விக்னேஷ்மாது,B.A.B.L, (Hons) மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதிகள் தரப்பு 4 ஆம் சாட்சியின் முதல் விசாரணை</u>

12.03.2018 தேதியிட்ட நடேசன் என்பவர் எனக்கு ஆதரவாக எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் அசல் வ.சா.6.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு பவர் அளித்த நடேசன் எனக்கு சித்தப்பா என்றால் சரி. பிரதிவாதிகள் எனது பெரியப்பா ராமசாமியின் மனைவி மற்றும் மகள் என்றால் சரிதான். இதே சொத்து தொடர்பாக நடேசன் ஆரம்பத்தில் பூமலை என்பவருக்கு பவர் அளித்திருந்தார் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரம் இன்று வரை நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. அதனை நடேசன் ரத்து செய்துவிட்டார். அவ்வாறு நடேசன் மேற்கண்ட பூமலைக்கு அளித்த பவர் பத்திரத்தை

ரத்துசெய்ததற்கு நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. இடைமனு எண். 439/2018 ஐ நான் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் இந்த வழக்கை நான் நடத்துவதற்காக தாக்கல் செய்தேன். அந்த மனுவை தாக்கல் செய்த பின்னிட்டு அழகம்மாள் என்பவரை விசாரித்தார்களா இல்லையா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அழகம்மாள் தாக்கல் செய்த ஆவணங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அழகம்மாள் அவர் தரப்பில் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீது , மின் கட்டண ரசீது ஆகிய ஆவணங்களின் தன்மை மற்றும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சியிடம் ஆவணங்கள் காட்டப்பட்டது, சாட்சி மேற்படி ஆவணங்கள் முழு சொத்திற்கான ஆவணங்கள் இல்லை என்று தாவா சொத்தில் உள்ள இரண்டு வீட்டின் அழகம்மாள் வசித்து வருகிறார் என்று சாட்சியம் அளித்தார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா. 1 தாவா சொத்து பட்டா ஆவணத்தில் ராமசாமியின் பெயர் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். மேற்படி அழகம்மாள் எங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இடை மனு எண். 9/2023 ஐ மேற்படி அழகம்மாள் குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் எங்களால் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆகவே எனது பிரமாணவாக்குமூலம் பத்திஎண்.4-ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தெரியாது என்றால் சரியில்லை. தாவா சொத்திற்குண்டான மின் இணைப்பு மற்றும் வீட்டு வரி ரசீது ஆகியவை ராமசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். தற்போது மின் கட்டணம் மற்றும் வீட்டுவரி மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றை அழகம்மாள் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். இதற்குமுன் நான் ஏதேனும் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஆகவே கூடுதல் பிரமாணவாக்குமூலம் குறித்த சங்கதிகள் தவறானவை

என்றால் சரியல்ல. அ.வ.எண். 53/2010 வழக்கின் யார் யார் வாதிகள் என்றால் நடேசன் ஜம்புலிங்கம் ஆவார். பூங்கொடி பாலசுப்பிரமணியம் என்பவர் 20 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அ.வ.எண். 53/2010 வழக்கின் என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றால் 5100 சதுரடி தங்களுக்கு சொந்தம் என்று நடேசன் ஜம்புலிங்கம் சொல்லியுள்ளார். அதை தவிர வேறு என்ன விவரம் சொல்லியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலம் பத்தி எண்.5 முதல் 10 தவறானவை என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் உறவு முறை உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.406/2012 தாவா சொத்தில் 5100 சதுரடியில் பிரதிவாதி சுவாதீனம் செய்து வருவதாலும், அ.வ.எண். 53/2010-ல் 10200 சதுரடியில் அந்த வழக்கின் வாதிகள் சுவாதீனம் செய்து வருவதால் அ.வ.எண். 406/2012 ஐ தள்ளுபடி செய்துவிட்டு அ.வ.எண்.53/2010 தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பவர் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு, வீட்டு கதவுஎண் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட வீடு தார்சு வீடு என்றால் ஓட்டுவீடு தான். எந்த வகையான ஓடு போடப்பட்டுள்ளதால் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஒப்பம்/சுரேஷ்

ஒப்பம் / திரு.கே.விக்னேஷ்மாது,
(FAC) மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.